திருநெல்வேலி மாவட்ட ஆட்சியருக்கு 9—3—1974-ல் விளக்கம் கொடுத்துள்ளனர். இது சம்பந்தமாக அரசு ஆணை 9, சமூக நலம், 3—1—1974-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணையில் 'பரவன்' சமூகத்தைச் சார்ந்த கிறிஸ்தவர்களுக்கும் கல்விச் சலுகை 92-வது விதியின் படி முழுச் சலுகை பெற உரிமை உள்ளனர் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த விளக்க உரைக்குப் பின்பு மாணவர்களுக்குக் கல்விச் சலுகை வழங்கப் பெற்றதாக கல்லூரிக் கல்வி இயக்குநர் தெரிவித்து உள்ளார். இதன்படி தூத்துக்குடியிலுள்ள வ.உ.சி., காமராஜ் கல்லூரிகளில் 'பரவன்' சமூக கிறிஸ்தவ மாணவர்களிடமிருந்து கல்விக் கட்டணம் கோருவது நிறுத்தப்பட்டுள்ளது.

(ஆ) இரயில் இணைப்புப் பாதைத் திட்டத்திற்காக குமரி மாவட்டத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலங்களுக்கான இழப்பீடு நிலச் சொந்தக்காரர்களுக்கு கொடுக்கப்படாதது குறித்து.

திரு. எ. பாலையா: தலைவரவர்களே, திருநெல்வேலி—திருவனந்தபுரம் ரயில் இணைப்புப் பாதை ஏற்படுத்தும் திட்டத்திற்காக கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏராளமான நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வேலையும் தொடங்கப்பட்டு நீண்ட நாட்களாகியும் இதுவரையிலும் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்குரிய தொகையை நிலச் சொந்தக்காரர்களுக்குக் கொடுக்கப்படவில்லை என்பது பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை பொதுப்பணித் துறை அமைச்சரவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, திருநெல்வேலியிலிருந்து நாகர்கோவில் வழியாகத் திருவனந்தபுரத்திற்குப் பிராட்கேஜ் இருப்புப் பாதை அமைக்கவும், கன்னியாகுமரிக்குக் கிளைப் பாதை ஒன்று அமைக்கவும் இரயில்வே அமைச்சகம் (இரயில்வே வாரியம்) 1972, ஏப்ரலில் ஒப்புதல் வழங்கியது. இவ்வகையில், இடம் தொடர்பான இறுதி ஆய்வு முடிந்துவிட்டதென்றும், நிலம் கையகப்படுத்தும் பணியாளர்கள் இரயில்வே பணியாளர்கள் ஒத்துழைப்புடன் நிலம் கையகப்படுத்தும் பணியை மேற்கொண்டுள்ளனர் என்றும் பாளையங்கோட்டை தலைமைப் பொறியாளர் (கட்டுமானம்) கூறியுள்ளார்.

1974 ஏப்ரல் 2] [திரு. ப. உ. சண்முகம்]

கன்னியாகுமரி மாவட்டத்தில், 73 பேருக்குச் சொந்த மாகவுள்ள 953 ஏக்கர் பரப்பளவு நிலம் இரயில்வே துறையி னருக்காகக் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது என்றும், நிலச் சொந்தக்காரர்களின் இசைவுடன் சுமார் 550 ஏக்கர் பரப்பளவுள்ள நிலத்தை இரயில்வே அதிகாரிகள் பெற்றுள்ளனர் என்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் தெரிவித் துள்ளார்.

நிலம் கையகப்படுத்தும் பணியையும், நிலச் சொந்தக்காரர் களுக்கு இழப்பீடு வழங்கும் பணியையும் தாமதமின்றி விரைந்து முடிக்கத் தேவையான நடவடிக்கைகள் அனைத்தும் மேற்கொள்ளப் பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கையகப்படுத்த வேண்டியுள்ள 953 ஏக்கர் நிலத்தைப் பொறுத்தவரையில் 65 பேருக்குச் சொந்தமாகவுள்ள 824.81 ஏக்கர் நிலம் தொடர்பாக, நிலம் கையகப்படுத்தல் சட்டத்தைச் சேர்ந்த 4(1) பிரிவின்கீழ் வரைவு அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது ; 34 பேருக்குச் சொந்தமாகவுள்ள 436.48 ஏக்கர் நிலம் தொடர்பாக, இச்சட்டத்தின் 5-வது பிரிவின் கீழ் விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

15 பேருக்குச் சொந்தமாகவுள்ள 211.62 ஏக்கர் நிலம் தொடர் பாக, இச்சட்டத்தின் 6-வது பிரிவின் கீழ் மேற்படி நிலங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளதாக அறிக்கும் வரைவு அறிவிப்புக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

29 பேருக்குச் சொந்தமாகவுள்ள 412.55 ஏக்கர் நிலம் தொடர் பாக நிலத்தை மதிப்பீடு செய்வது குறித்த செயற் குறிப்புகள் பல்வேறு நிலைகளில் பரிசிலிக்கப்பட்டு வருகின்றன.

இந்த நேர்வுகள் அனைத்திலும் நில மதிப்பீட்டுச் செயற் குறிப்புகளுக்கு வருவாய் வாரியம் ஒப்புதல் வழங்க வேண்டி யுள்ளது. இவ்வகையில் தொடர்புள்ள நிலங்கள் அனைத்தையும் கையகப் படுத்துவதற்கான செயற்குறிப்புகள் மீது விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, நிலச் சொந்தக்காரர்களுக்குக் கூடிய விரைவில் இழப்பீடு வழங்கப்படும்.

இந்நிலையில் அதுபற்றி இந்த அவையில் தற்போது விவாதம் மேற்கொள்வதற்கான அவசியம் ஏதுமில்லை.

திரு. ஏ. பாலையா : தலைவரவர்களே, திருநெல்வேலி- திருவனந்தபுரம் ரெயில் இணைப்புப் பாதை போடுவதற்காக நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டு சுமார் 1½ வருஷங்களுக்கு மேல் ஆகிறது. ஆனால் நமது சர்க்கார் அதற்கான இழப்பீட்டுத் தொகையை இது வரையில் வழங்கவில்லை. ஆனால் கேரள அரசால் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலத்திற்கு ஆர்ஜிதம் செய்தவுடனே இழப்பீட்டுத் தொகை வழங்கப்பட்டிருக்கிறது. நமது சர்க்காரில் மட்டும் ஏன் இந்தக் கால தாமதம் ஏற்பட்டது என்பதை அமைச்சரவர்கள் விளக்க வேண்டும். மேலும் இந்த நிலத்தை இழந்திருக்கிறவர்கள் அந்த நிலத்தை வைத்து தங்களுடைய வாழ்க்கை வசதிகளை அமைத்துக்கொள்கிறவர்கள். அவர்கள் அந்த நிலத்தை இழந்ததால் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்கு உடனடியாக இழப்பீட்டுத் தொகையைக் கொடுப்பதற்கு அரசாங்கம் ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, நில ஆர்ஜித சட்டத்தின்கீழ் நிலம் முறையாகக் கையகப்படுத்தப் படுகிறது. அதற்குப் பிறகுதான் நஷ்ட ஈடு கொடுக்கவேண்டும். கேரள அரசாங்கம் எப்படிக் கொடுத்தது என்று எனக்குத் தெரியாது. நஷ்ட ஈடு கொடுப்பதை விரைவாகக் கொடுக்க வேண்டுமென்று மாவட்ட ஆட்சியாளர்கள் கேட்டுக் கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

திரு. ஏ. பாலையா : தலைவரவர்களே, நான் அறிந்த மட்டில் ஆர்ஜிதம் செய்யப்பட்ட நிலங்களுக்கு 'வேல்யுவேஷன்' விலை நிர்ணயம் செய்வதில் காலதாமதம் ஏற்படுவதாக அறிகிறேன். அது எதனால் என்று சொன்னால் ரெவின்யூ போர்டிங் சட்டத்திட்டங்கள் கடுமையானதாக இருப்பதால்தான் என்று அறிகிறேன். ஆகவே, அந்தச் சட்டதிட்டங்களை அரசு 'ரிலாக்ஸ்' செய்து உத்தரவு பிறப்பிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, எந்தச் சட்டத்தையும் திருத்தி 'ரிலாக்ஸ்' செய்யமுடியாது. அப்படிச் செய்தால் அதற்காக ஒரு ஊழல் பட்டியல் வரும்.